மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம்
வடக்கு மாகாணம்
පළාත් මෝටර් ප්‍රවාහන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත
**Provincial Department of Motor Traffic**
**Northern Province**

**My No:** NP/05/13/01/MOB/DMT/2022

05 OCT 2022 2022.10.04

மாவட்ட செயலாளர்,

யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/மன்னார்/முல்லைத்தீவு/வவுனியா

<u>மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களங்களத்துடன் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவை – 2022</u>

மேற்படி விடயம் தொடர்பாக மாகாண மற்றும் மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களங்கள் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவையானது ஏப்ரல் மாதம் 09 மற்றும் 10 ம் திகதிகளில் நடாத்த திட்டமிட்டு பின்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 22 மற்றும் 23 ம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை மாகாணசபை வளாகம் கைதடியில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன். அன்றைய தினம் குறித்த நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1. வாசித்தலில் எழுதுதலில் விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளலும்.
2. சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல்.
3. தனிப்பட்ட மோட்டார் கோச்சினை ஒமினிபஸ் ஆக மாற்றம் செய்தல்
4. வாகன பதிவுப்பத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.
5. வாகன இலக்கத்தகடு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள்.
6. வாகன உடமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல்
7. 2014/2015 ம் ஆண்டு செயற்திட்டத்தின் ஊடாக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் நிபந்தனைகள் நீக்குதல்.
8. வாகன நிறைசான்றிதழ் பெற்றுக் கொள்ளல்.
9. இதுவரை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு (RMV) தீர்க்கப்படாத நிலுவைகள்
10. வாகன வருமானவரி தொடர்பானவை.

Provincial Council Complex, A9 Road, kaithady,
Commissioner – 021-222 0831 AO– 021-221 9297 Gen/Fax – 021-221 6695
www.np.gov.lk mail :
motortrafficnp@gmail.com

எனவே குறித்த தகவலை தங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி எமக்கு தங்களின் பூரண ஒத்துழைப்பினையும் வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு: வாசித்தலில் எழுதுதலில் விசேட தேவையுடையோருக்கான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த படிவத்தினை விசேட தேவையுடையோருக்கு வழங்கி பூரணப்படுத்தி 14.10.2022 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுஜீவா சிவதாஸ்,
ஆணையாளர்.

பிரதி: பிரதேச செயலாளர்கள்- உரிய நடவடிக்கைக்காககவும், பூரண ஒத்துழைப்பிற்காகவும்

## வாகன சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்போருக்கு கிராம சேவை உத்தியோகத்தரால் வழங்கப்படும் அறிக்கை

01. பெயர்: ....................................................................................................................................
02. முகவரி: ....................................................................................................................................
03. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................................................................
04. பால்: ஆண்/பெண்
05. பிறந்த திகதி: ..........................................................................................................................
06. தொழில்: ....................................................................................................................................
07. கல்வித் தகைமைகள்: ..................................................................................................................
(இறுதியாக சித்தி எய்திய வகுப்பு)
08. வாசித்து விளங்க முடியும்: ..........................................................................................................
09. எழுத்து ஆற்றல்: ஆம் / இல்லை

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்
(தேசிய அடையாள அட்டை பிரதியும் இணைத்து அனுப்பி வைக்கவும்)

..........................................
திகதி

10. கிராம உத்தியோகத்தரின் சிபாரிசு

மேற்படி விண்ணப்பதாரி எழுத்து/வாசிப்பு திறன் (திருப்தியின்மை) உடையவர் என சிபாரிசு செய்கின்றேன்.

..................................................
கிராம உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை

..........................................
திகதி

11. கிராம உத்தியோகத்தரால் சிபாரிசு செய்யப்பட்ட கிராம சேவகர் இலக்கம்/ பிரிவு.............. கொண்ட முகவரியில் வசிக்கும் இவர் சாரதி அனுமதிப்பத்திர வாய்மொழி பரீட்சைக்கு தோற்ற தகைமை உள்ளவர் என உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................
பிரதேச செயலாளரின்
கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை

..........................................
திகதி

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பரீட்சை குழுவின் சிபாரிசுமேற்படி விண்ணப்பத்தை பரிசீலித்து எழுத்து/வாசிப்பு திறன் அற்றோருக்கு விசேட பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுகின்றார்/ அனுமதிக்கப்படவில்லை.

..........................................
குழு உறுப்பினர் 01

..........................................
குழு உறுப்பினர் 02

..........................................
குழு உறுப்பினர் 03